எச்.எம்.ஓ.பி.33/2019 ம.சா.1 வெங்கடேசன் த/பெ ரங்கநாதன்

**02.04.2024 குறுக்கு விசாரணை**

1. எனக்கு 26.08.1979 ல் திருமணம் ஆனது என்றால் சரிதான். எனக்கு திருமணம் ஆகி 44 ஆண்டுகள் ஆகிறது என்றால் சரிதான். எனக்கும் எதிர்மனுதாரருக்கும் திருமணத்தின் பலனாக புவனேஸ்வரி என்ற பெண் குழந்தை உள்ளார். தற்போது என் மகள் புவனேஸ்வரிக்கு 40 வயதாகிறது.

2. என் மகள் புவனேஸ்வரிக்கு திருமணம் ஆகி குழந்தைகள் உள்ளார்கள் என்றால் சரிதான். நானும் என் மனைவியும் ஒன்றாக இருந்து தான் என் மகளுக்கு திருமணத்தை செய்து வைத்தோம் என்றால் சரிதான். இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு எனக்கு பக்கவாதம் வந்தது என்றால் சரிதான்.

3. நான் 2,3 வருடங்களாக இரும்பேட்டில் தனியாக வசித்து வருகிறேன். நான் இந்த மனு தாக்கல் செய்தபிறகு என் மனைவிக்கும் என் மகளுக்கும் ஜீவனாம்சம் அல்லது வேறு செலவுத் தொகை எதுவும் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. நான் என் மனுவில் என்மனைவி திருமணத்திற்கு பிறகு அவ்வப்போது ஓடிபோய் விடுவார் என்றும் பின்னர் திரும்ப வந்து என்னிடம் எழுதி கொடுத்துவிட்டு தான் மீண்டும் வாழ ஆரம்பிப்பார் என்று சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். அவ்வாறு என்மனைவி எழுதிக்கொடுத்ததாக சொல்லும் ஆவணம் எதுவும் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனாஎன்றால் இல்லை.

4. எனக்கும் எதிர்மனுதாரருக்குமான 44 ஆண்டு காலம் திருமண வாழ்க்கையில் இந்த மனுவை தவிர வேறு எந்த நடவடிக்கையும் நான் என் மனைவிமீது எடுக்கவில்லை என்றால் சரிதான். என் மனைவி 44 ஆண்டு காலமாக நல்ல முறையில்தான் என்னுடன் இல்லற வாழ்க்கை நடத்தினார் என்றும் நான் தான் பொய்யான விவரத்தை சொல்லி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

5. திருமணத்திற்கு பிறகு நான்தான் உணர்ச்சிவசப்பட்டு என் மனைவியை அடித்து கொடுமைப் படுத்தினேன் என்றும் ஆனால் என்மனைவி பெருந்தன்மையாக விட்டு கொடுத்து தான் என்னுடன் வாழ்ந்து வந்தார் என்று சொன்னால் சரியல்ல.

6. நான் என் வயதுக்குமீறிய செயலினால் தான் உடல் பாதிப்பு ஏற்பட்டு ரத்த கொதிப்பு அதிகமானது என்றும் அதற்கு காரணம் என் மனைவி என்று நானே நினைத்து கொண்டு என் மனைவியை அலைகழிக்க வேண்டுமென்பதற்காக இந்த பொய்யான வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

7. என்மனைவி ஒரு இந்துமனைவிக்குரிய கடமையை சரியாக செய்து வந்ததால் தான் இத்தனை வருடங்கள் அவருடன் சேர்ந்து வாழ்ந்தேன் என்றும் தாமதமாக இந்த மனுவை அவர் மீது தாக்கல் செய்துள்ளேன். தாக்கல் செய்துள்ளதற்கு காரணம் என் மனவியை அலைகழிக்கவேண்டுமென்பதற்காக தான் என்றால் சரியல்ல.

8. இந்த வழக்கை தாக்கல் செய்தபிறகு என்னையும் என் மனைவியையும் சேர்த்து வைப்பதற்காக பேசுவதற்கு என் மகள் நீதிமன்றத்திற்கு வந்திருந்தார் என்றும் அது சம்மந்தமாக என் மகள் மீது நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. என் மகளும் மருமகனும் எங்களை சேர்த்து வைக்க 4,5 முறை முயன்றபோது நான்தான் அருவருக்கத்தக்க வார்த்தைகளால் அவர்களை திட்டி அனுப்பிவிட்டேன் என்றால் சரியல்ல. நான் என்மகள் மற்றும் மருமகனுடன்பேசுவதில்லை என்றால் சரிதான்.

9. என் மனைவி ஒரு கணவனுக்குரிய கடமையை செய்ய தயாராக உள்ளார் என்றும்

என்னுடன் சேர்ந்து வாழ தான் விரும்புகிறார் என்றும் நான் தான் இந்த மனுவை தவறாக தாக்கல் செய்துள்ளேன் என்றும் அதனால் இந்த மனு தள்ளுபடி செய்யப்படவேண்டுமென்றால் சரியல்ல.